# தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் (வார்டு குழு மற்றும் பகுதி சபா) விதிகள் 2022

## அரசாணை எண்.92. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.24.06.2022

## வார்டு குழு மற்றும் பகுதி சபா உருவாக்குதல்

### வார்டு குழு

- நகராட்சிப் பகுதிகளில் ஒரு வார்டிற்கு 4 பகுதி சபா உறுப்பினர்கள் இடம் பெற வேண்டும்.
- நகரமன்றம் ஒரு பகுதிக்கு ஒரு உறுப்பினரை நியமனம் செய்ய வேண்டும்.
- வார்டு குழுவிற்கு சம்மந்தப்பட்ட வார்டு நகரமன்ற உறுப்பினர் தலைவராக இருப்பார்.
- பகுதி குழு உறுப்பினரானவர் நகரமன்ற உறுப்பினர் தேர்வுக்கு உள்ள அனைத்து தகுதிகளுடன் இருக்க வேண்டும்.
- நகரமன்றம் ஒரு பகுதிக்கு ஒருவர் என்ற அடிப்படையில் வாக்காளர் பட்டியலில் பதிவு செய்யப்பட்டுள்ள நபரை தேர்வு செய்து பகுதி குழுவிற்கு நியமனம் செய்தல் வேண்டும்.
- நகரமன்றம் நியமிக்கும் நபர்களிடமிருந்து படிவம் 1–ல் மேற்படி நபர்களின் விருப்பத்தினை நகராட்சி ஆணையர் பெற வேண்டும்.
- நியமனம் செய்யப்பட்டுள்ள நபர்களின் விவரங்களை நகராட்சி ஆணையர் அவர்களால் சரிபார்க்கப்பட வேண்டும்.
- தகுதியுடைய நபர்களின் விவரப்பட்டியல் நகரமன்றத்தின் முடிவிற்கு வைக்கப்பட வேண்டும்.
- நகரமன்றம் முடிவு செய்தபின், நியமனம் செய்யப்பட்டுள்ள உறுப்பினர்களுக்கு படிவம் 2–ல் ஆணையரால் உத்ததிரவு வழங்கப்பட வேண்டும்.
- பகுதி குழுவிற்கு தகுதியில்லாத நபர்களை நகரமன்றம் நியமனம் செய்திருந்தால் அதன் விவரத்தினையும், மேலும் புதிய நபர்களை நியமனம் செய்ய நகர்மன்றத்தின் பார்வைக்கு ஆணையரால் வைக்கப்பட வேண்டும்.
- வார்டு குழுவின் தலைவர் வார்டு குழு கூட்டத்தினை நடத்த வேண்டும்.
- வார்டு குழுவின் கூட்டம் 3 மாதங்களுக்கு ஒருமுறை நடத்தப்பட வேண்டும்.
- வார்டு குழு தலைவர் முன்னிலையில் கூட்டம் நடத்தப்பட வேண்டும்.
- கூட்டத்தில் குறைந்தபட்ச கோரம்
  குழு தலைவர் மற்றும் 2 உறுப்பினர்கள் இடம் பெற வேண்டும்.

- வார்டு குழு தலைவர் கூட்டத்தில் கலந்து கொள்ள இயலாத நிலையில், நிர்வாக அலுவலர் கூட்டத்தினை நடத்திட வேண்டும்.
- வார்டுக்கு தேவையான திட்டங்கள் மற்றும் ஆலோசனைகள் நகரமன்றத்திற்கு சமர்பிக்க வேண்டும்.
- வார்டில் தேவையான மற்றும் மேற்கொள்ளப்பட வேண்டிய அடிப்படை வசதிகள் மற்றும் ஆலோசனைகளை நகரமன்றத்திற்கு அனுப்ப வேண்டும்.

•••••••••••••••••••••••••••••••••••••••••••••••••••••••••••••••••••••••••••••••••••••••••••••••••

## பகுதி சபா

- ஒவ்வொரு வார்டும் 4 பகுதிகளாக பிரிக்கப்பட வேண்டும்.
- வார்டுகளை பகுதிகளாக பிரித்து மாவட்ட ஆட்சித் தலைவர் நகராட்சி ஆணையர்களுடன் கலந்தாய்வு செய்து, பகுதிகளுக்கான எல்லைகளை வரையறை செய்து மாவட்ட அரசிதழில் அறிவிக்கை செய்ய வேண்டும்.
- பகுதிகள் வரையறை செய்யப்பட்டுள்ளவைகளுக்கு எண்கள் அளிக்கப்பட வேண்டும்.
- வார்டு எல்லைகள் மாற்றம் செய்யும் வரை பகுதிக்கான எல்லைகள் நடைமுறையில் இருக்க வேண்டும்.
- வார்டுகளின் எல்லைகள் மாற்றம் செய்யும் போது மட்டுமே பகுதிக்கான எல்லைகள் மாற்றம் செய்யயப்பட வேண்டும்.
- பகுதி சபாவின் தலைவர் பகுதி சபாவிற்கான கூட்டத்தினை நடத்துவார்.
- 3 மாதங்களுக்கு ஒருமுறை கூட்டம் நடத்தப்பட வேண்டும்.
- கூட்டத்திற்கான கோரம் கீழ்வருமாறு

| | மக்கள் தொகை | கூட்டத்திற்கான கோரம் |
|---|---|---|
| 1. | 500 வரை | 50 |
| 2. | 501 முதல் 3000 வரை | 100 |
| 3. | 3001 முதல் 10000 வரை | 200 |
| 4. | 10001க்கு மேல் | 300 |

- பகுதி சபாக்கான கூட்டம் பகுதி சபா தலைவரால் நடத்தப்பட வேண்டும்.

**அரசாணை எண்.93. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.24.06.2022**

**செயலாளர் நியமனம் மற்றும் செயலாளரின் பணிகள்**

## வார்டு குழு

**1) செயலாளர் நியமனம்**

உதவியாளர் பதவிக்கு குறைவில்லாத நகராட்சி பணியாளரை நகரமன்றம் **வார்டு குழு செயலாளராக** நியமனம் செய்ய வேண்டும்.

**2) செயலாளரின் பணிகள்**

- வார்டு குழு கூட்டம் நடைபெறும் நாள், நேரம் மற்றும் இடம் குறித்த அறிவிப்பு அனுப்ப வேண்டும்.
- கூட்ட நடவடிக்கைகள் தயார் செய்து அதனை தலைவரிடம் ஒப்புதல் பெற வேண்டும்.
- வார்டுக்குள் நடைபெற்று வரும் திட்டப் பணிகள், அபிவிருத்தி பணிகள் மற்றும் பயாணாளிகளின் விவரப்பட்டியலை வார்டு குழு கூட்டத்தில் தகவலுக்காக வைக்க வேண்டும்.
- நகராட்சி வரி மற்றும் வரியில்லா இனங்களை செலுத்தாத நபர்களின் விவரப்பட்டியலை வார்டு குழுவின் தகவலுக்காக வைக்க வேண்டும்.

## பகுதி சபா

**1) பகுதி குழு செயலாளர் நியமனம்**

இளநிலை உதவியாளர் அல்லது வருவாய் உதவியாளர் பதவிக்கு குறைவில்லாத நகராட்சி பணியாளரை நகரமன்றம் **வார்டு குழு செயலாளராக** நியமனம் செய்ய வேண்டும்.

**2) பகுதி குழு செயலாளரின் பணிகள்**

- பகுதி சபா கூட்டம் நடைபெறும் நாள், நேரம் மற்றும் இடம் குறித்த அறிவிப்பு அனுப்ப வேண்டும்.
- கூட்ட நடவடிக்கைகள் தயார் செய்து அதனை குழு சபா தலைவரிடம் ஒப்புதல் பெற வேண்டும்.
- வார்டுக்குள் நடைபெற்று வரும் திட்டப் பணிகள், அபிவிருத்தி பணிகள் மற்றும் பயானிகளின் விவரப்பட்டியலை பகுதி சபா கூட்டத்தில் தகவலுக்காக வைக்க வேண்டும்.
- நகராட்சி வரி மற்றும் வரியில்லா இனங்களை செலுத்தாத நபர்களின் விவரப்பட்டியலை பகுதி சபாவின் தகவலுக்காக வைக்க வேண்டும்.